"அகரமுதலவெழுத்தெல்லாம் ஆதி பகவன்முதற்றேயுலகு"

புதினப்பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது.

Registered at the G.P.O.

# சுதேசநாட்டியம்.

## THE JAFFNA NATIVE OPINION.

"யதார்த்தவாதி வெகுஜன விரோதி"

மாசமிருமுறை பகிரங்கஞ் செய்யப்படும்

தருமமே செயம் சத்தியமே நித்தியம்

மலர் 37 } யாழ்ப்பாணம், வயாவிளான் பிரமாதி ஞு ஆடி மீ ௳-ந் ௨ (20-7-39) வியாழக்கிழமை { இதழ் 19

### தோத்திரம்

பெருப்புலர் காலை மூழ்கிப் பித்தர்க்குப் பத்தராகி
யருப்பொடு மலர்கள் கொண்டாங் கார்வத்தை யுள்ளேவைத்து
விரும்பிதல் விளக்குத் தூபம் விதியினு லிடவல்லார்க்குக்
கரும்பினிற் கட்டிபோல்வார் கடவூர்வீ ரட்டனுரே.

(திருநாவுக்கரசுசுவாமிகள்)

# வடமாகாணத்துள்ள சில இடப்பெயர்களின் வரலாறு.

திரு. ச. குமாரசுவாமிப்பிள்ளை

உரிமைபதிவு.

(முன்தொடர்ச்சி)

வேடுவன்கண்டி- (நவாலி) வேடுவன்-வேடன், வேட்டுவன். வேடுவரெனப்படுவார் மரம்வெட்டி வேலிபோட்டு விளைநிலம் முதலியன காக்கும் பண்ணையாட்களாம் (சண்டேற்பண்டிதர் மலையாள அகராதிபார்க்க.) வேடுவர் நவாலியின்கண்ணே முன்னொருகாலம் வசித்தமையை ஆங்குள்ள வேடுவன்குளமும் விளக்கமாய்க்காட்டுகின்றது. அம்மக்கள் இலங்கை இந்தியாவின் பழங் குடிகளைச் சார்ந்தவர். வேட்டைத்தொழிலையே ஆதியில் தம் ஜீவனோபாயமாய்க்கொண்டிருந்தவர். பண்ணைவேலை, சுற்றச்சவேலை, உப்புச்செய்கை முதலிய முயற்சிகளை மேற்கொண்டு சீவிப்பர்.

### கொக்கட்டிய

நாவற்கொக்கட்டியன்- (கசைச்சி) கொக்கட்டிய என்பது சிங்களத்திலே ஒரு மரப்பெயராம். அம்மரம் கொறுக்காய்ப்புளி வர்க்கத்தைச்சேர்ந்தது. அதன் பெயரினாலேயே கொக்கட்டிய-கொல்லேவ (அநுராதபுரம்) கொக்கட்டிய-மாலுவ (வதுளை) சொக்கட்டிய-வல (இரத்தினபுரி) என்னுஞ் சிங்களக்கிராமங்களும், கொக்கட்டிச்சோலை (மட்டக்களப்பு) என்னும் தமிழ்க்கிராமமும் அறியப்படுவனவாகும்.

ஸ்தான நாமங்களிலே ஸ்தானப் பொருளைத் தந்துநிற்பனவாகிய கம, கொடை, கொல்ல, கொல்லேவ, பாய, வல, வில முதலிய சொற்களுள் யாதுமில்லாமல், மரப்பெயர் மாத்திரமே சிலவிடங்கட்குப் பெயராயிருத்தலை 'கலசஹ' 'கட்டுசஹ' 'தூனகஹ' (கஹ-மரம்) என்னும் கிராமப்பெயர்களிற் கண்டறிந்தவர் கொக்கட்டிய என்னும் மரப்பெயர் ஒரு குறிச்சிக்குப் பெயராயிருத்தல் கூடாதென்னுர். அவ்வண்ணம் மரப்பெயர் தனியே வழங்கப்படுதல் எதனுலெனின், முன்னொருகாலம் அதனைச் சேர்ந்துநின்று தானப்பொருளையுணர்த்திய சொல்லை அரை குறையாய் வார்த்தையாடுஞ் சோம்பர் வாய்விட்டுச் சொல்லிவராமையாலென்க. கொக்கட்டியவென்னுந் தானப்பெயரின் வரலாற்றை நன்குணராத தமிழர் அதற்கு 'நாவல்' என்னுமோர் அடைசொற்கூட்டி, அன் விகுதி கொடுத்து வழங்குவாராயினர். கொக்கட்டி என்னுந் தமிழ்ச்சொல் ஒரு செடியைக் குறிப்பதாம்.

வெள்ளாம்பொக்கட்டி- [தென்மிராட்சி] இப்பெயரினிடத்திருக்கும் போக்கட்டி என்பது கொக்கட்டிய என்பதன் சிதைவேபோலும். ககரம் பகரமாவதைப் பூவல் (கூவல்) போக்களம் (கொப்புளம்) புழல் (குழல்) புழை (குழை) பரி (கரி, கருப்பு) போக்குள் (கொப்பூழ், கொப்புள்) முதலிய சொற்களிற் கண்டுகொள்க. வெள்ளாளரே இத்தானத்திலிருந்த விசேஷகுடிகளான்மையாலும், சான்றூர்வசித்த போக்கட்டியினின்றும் இதனை வேற்றுமைப்படுத்தல் வேண்டியும், இதற்கு வெள்ளான்போக்கட்டி யென்னும் பெயர் வழங்கலாயிற்று. 'வெள்ளான்' என்பது 'வெள்ளாம்' எனச் சிதைவுற்றது. வெள்ளாம்குடி, வெள்ளாம்செடி என்னும் சொற்றொடர்களை நோக்குக.

சான்றூன் பொக்கட்டி- இத்தானத்துப் பழங் குடிகள் சான்றூரென்பது வெளிப்படை. சான்றூர் ஈழதேயத்துப் பழங்குடிகளைச் சேர்ந்தாரென்பதற்குப் பலசான்றுண்டு. அவையாவன:—

(1) 'ஈழகுலச்சான்றூர்' என்னுந் தொடர்மொழி தொல்லாசிரியரால் வழங்கப்பட்டிருக்கின்றமையும்,

(2) சிங்களருக்குள்ளே கள்ளுச்சேர்க்குஞ் சாதியார்க்குச் 'சாண்டு' என்னும் பெயர் வழங்கப்பட்டு வருகின்றமையும்,

(3) இலங்கைத்தீவின் தமிழ்ப்பெயராகிய ஈழம் என்னுஞ் சொற்கு 'கள்' என்னும் பொருள் அமைந்திருக்கின்றமையும்,

(4) மலையாளத்திலேயுள்ள மரமேறிகட்கு ஈழவர், ஈழுவர் என நாமமுண்மையும், அன்னூர் 'இலங்கையிலிருந்து சிறைசெய்யப்பட்டுச்சென்று சேரநாட்டில் வசிக்குஞ் சிங்களர்' என ஆன்றோர் அநுமானிக்கின்றமையும், அவ்விழவரும் தம் முன்னோர் ஈழமண்டலத்திலிருந்து வந்தாரென்னும் பரம்பரைக் கேள்வியுடையோரா யிருக்கின்றமையும்,

(5) 'சாணுன்காசு' எனப் பெயரிய ஒரு நாணயம் பண்டு யாழ்ப்பாணத்திலே வழங்கியமையும்,

(6) தமிழரசர் காலந்தொட்டு ஆங்கிலேய அரசின் ஆரம்பம்வரைக்கும் அறவிடப்பட்டுவந்த அதிகாரிவரியை இறுத்துவந்தோராகிய வேளாளர், சான்றூர், தனக்காரர் என்னும் முக்குலத்தாரே யாழ்ப்பாணத்துப் பழங்குடிகளென உலாந்தாதேச தளபதிகளின் அறிக்கைப்பத்திரங்களிலே அறையப்பட்டிருக்கின்றமையும் ஆகிய இவைகளேயாம்.

### கெட்டிய

துலாக்கட்டை- [சுளிபுரம்] சிங்-துலக்கெட்டிய துல-பெரிய, கெட்டிய என்பது துண்டு, கூடல் எனப் பொருள்படுமாம். இச்சொல்லைக் கோன்கெட்டிய, கொறக்கெட்டிய, பள்ளக்கணுக்கெட்டிய முதலிய சிங்களக் கிராமப்பெயர்களிற் காண்க.

(தொடரும்)

பெருங்கொடையான் பேணுன் வெகுளி யவனின், மருங்குடையார் மாநிலத் தில்,



துதிவெண்பா

ஞானஞ் சுகஞ்ஜியம் நல்லாயுள் தாவயவை
ஆனமுக வாகுமரா ஆறுமுகா-ஆனந்தப்
பேர்க்குமர னச்சியர்த்ரம் பீடுபெற்றநிற்
சீர்த்தியுடன்வந்து செகம். [கவெர்குச்

## சுதேச நாட்டியம்

யாழ்ப்பாணம், வயாவிளான்
பிரமாதி ஹு ஆனிமீ ௨-ந் உ

## யாழ்ப்பாணப் புகையிலையும் தீர்வையேற்றமும்

நமது யாழ்ப்பாண நாட்டவரின் பிரதான கமத்தொழில் புகையிலைச் செய்கையேயாகும் என்பது பலர்க்குந் தெரிந்ததோர் விஷயமாகும். இப் புகையிலைச்செய்கைக்கண் நமது நாட்டவர்படும்பாடு கொஞ்சமல்ல. கஷ்டம்மாத்திரமல்ல நஷ்டமுமே யடைகிறார்கள். போட்டமுதலுக்குத்தானும் புகையிலையை விற்றுக்கொள்ளமுடியாமல் அநேகர் வில்லங்கப்படுகின்றனர் என்றால் புகையிலைச் செய்கையின் ஈனஸ்திதியை நாம் என்னவென்று எடுத்துக்கூற இயலும்என்பதை வாசகர்களே யூகித்துக்கொள்வார்களாக. "பனையால்விழுந்தவனை மாடேறியுளக்கினது"போல, இந்தக் கஷ்டநிலையிலும் நஷ்டநிலையிலும் இருந்துவருகின்ற நமது புகையிலைக்கு இன்னுமொரு ஆபத்துவந்திருக்கிறது. அதாவது, நமது புகையிலை பெரும்பாலும் விற்பனையாகும் திருவாங்கூர் இராச்சியத்தில், அதற்கு தீர்வையைக் கூட்டிவிட்டதுதான். ஏலவேயிருந்துவந்த தீர்வையே கூடிவிட்டதென்றும், அதனைக் குறைக்கவேண்டுமென்றும் பிரயத்தனங்கள் நடந்துகொண்டிருக்கையில், இந்தக் கஷ்டமும் வந்தால் நாம் என்செய்வது. யாழ்ப்பாணத்தவராகிய நமக்கு இந்தக்கஷ்டம் எவ்வாறு நீங்குமோ தெரியவில்லை.

இலங்கையிற் சிங்களமக்கள் இந்தியரை நாடுகடத்துவதனுற்றான் இந்தியரும் ஆங்காங்கு கூட்டங்கள் கூடி இலங்கைப் பொருட்களைப் பகிஷ்காரம்பண்ணவேண்டும் என்று கிளர்ச்சிசெய்கிறார்கள். இந்தக் கிளர்ச்சியின்பயன்தான் புகையிலைத்தீர்வை யுயர்த்தப்பட்டதும் இது விஷயத்தில் இந்தியர் ஒன்று கவனிக்கவேண்டும். இந்தியரை நாடுகடத்தும்விஷயத்தில் யாழ்ப்பாணத்தவர் எதுவிதமும் ஈடுபடவில்லையென்பதே. அன்றியும் யாழ்ப்பாணத்திற்கும் மலையாளத்துக்கும் சரித்திர சம்பந்தமானநெருங்கியதொடர்புகள் இருக்கின்றன வென்பதையும் அன்னவர்கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். யாழ்ப்பாணத்தவருடைய கஷ்டநஷ்டங்களைத் தமது சொந்த கஷ்டநஷ்டங்களாக திருவாங்கூர்மக்கள் உணரவேண்டும்.

இதுவிஷயமாக யாழ்ப்பாணக் கமக்காரரும் புகையிலை வியாபாரிமார்களுமாகச்சேர்ந்து சென்ற சனிக்கிழமை பிற்பகல் மூன்றரை மணியளவில், புன்னாலைக்கட்டுவன் ஆங்கிலபாடசாலைமண்டபத்தில் ஓர் பகிரங்கக்கூட்டம் நடத்தினார்கள். அவ்வமயம் அதிகார் திரு. நாகநாதர் அவர்கள் அக்கிராசனம் வகித்தனர். திருவாளர்கள் சி. சுவாமிநாதன், வி. வீரசிங்கம், பிறக்றர் கார்த்திகேசு முதலிய பிரமுகர்கள் உபந்நியாசம் செய்தனர். தீர்மானங்களும் நிறைவேறப்பெற்றன. இவர்களுடைய முயற்சி நன்முயற்சியேயாகும். இம் முயற்சிக்குப் பலன் அளிக்குமாறு இறைவனை வேண்டுகிறோம்.

திரு. ஜி ஜி. பொன்னம்பலம், திரு. சு. நடேசன், அதிகார் நாகநாதர் ஆகிய மூவரையும் திருவாங்கூருக்கு அனுப்பவதாக இக்கூட்டம் தீர்மானிப்பது குறித்து நாம் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேம். இவர்கள் மூவரும் இதுவிஷயத்திற் கலந்துகொள்வதற்குத் தக்கவர்களேயாவர். இவர்கள்கூறுவதை திருவாங்கூர்சமஸ்தானம் கவனிக்குமென்றே நாம் திடமாக நம்புகிறோம். இருநாடுகட்குமிடையில் இருந்துவரும் பரஸ்பர ஒற்றுமையையும் நம்பிக்கையையும் முறியவிடாது பேணுவது திருவாங்கூர் சமஸ்தானத்தாருடைய செய்கையாகவிருக்கவேண்டுமென்று நாம் பெரிதும் விரும்புகிறோம். இம்மூவரும் யாழ்ப்பாணக் கமக்காரரின் கஷ்டநஷ்டங்களை எடுத்துக்கூறின், அதனைத் திருவாங்கூர் சமஸ்தானத்தார் செவிசாய்த்து, வரியைக்குறைப்பார்களென்றே இங்குள்ள ஏழைக்கமக்காரர் எதிர்பார்க்கின்றனர். சிங்களவரோடு பிணங்கிக்கொண்டு யாழ்ப்பாணத்தவர்க்கு நட்டம்செய்வது முறையல்லவென்பதைத் திருவாங்கூர்மக்கள் கவனிக்கவேண்டும். நமது சுருட்டைச் சிங்களவரும் பகிஷ்காரஞ்செய்யப் புகையிலையைத் திருவாங்கூர்மக்கள் பகிஷ்காரஞ்செய்ய நமதுபாடு இருதலைக்கொள்ளியெறும்புபோலல்லவா இருக்கின்றது. இந்தநிலைமையில் திருவாங்கூர்மக்கள் தம்மனமிளகிவிட்டுக்கொடுத்தாற்றான் நமக்கு ஏதும் விமோசனம் ஏற்படுமென்று நம்ப இடமுண்டு சிங்களமக்கள் நமக்கு நட்டம்செய்யவேண்டும்என்றே கங்கணங்கட்டி நிற்கின்றனர். இவற்றையெல்லாம் திருவாங்கூர் சமஸ்தானத்தார் நன்கு யோசிக்கவேண்டும். யோசித்து, அங்குசெல்லும் மூவருடைய பேச்சையும் அவதானித்து நமக்கு அநுகூலமானதோர் முடிபுக்குவரவேண்டும் என்பதே யெமதுவேண்டுகோளாகும். இந்த வேண்டுகோளை யன்னவர் இனிது நிறைவேற்றிவைப்பார்களென்றே பெரிதும் ஆவலோடு எதிர்பார்க்கின்றோம்.

---

### காலநிலை

மழையில்லை. வெயிலின் உக்கிரம் அதிகம். காற்று அமைதியாக வீசுகிறது. இதனுல் வெப்பம் சற்றுக் குறைவு.


---

### மயிலிட்டிக் கோயிற்பற்றுக்குப் புதிய அரசினர் வைத்தியசாலை

சங்கானை வல்லைரோட்டில் வயாவிளான் சந்தியிலிருந்து ஒரு மைல் தூரத்திலுள்ள "வவுணத்தப்பைச் சந்திக்கருகாமையிலிருக்கும் திரு. ந. இராசையா அவர்களின் கட்டிடத்தில் இம்மாதம் 10-ந் திகதி திங்கட்கிழமை தொடங்கி நோயாளருக்கு இலவசமாக மருந்து கொடுக்கும் வேலை ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

வாரந்தோறும் திங்கள்-வியாழன் வாரங்களில் காலை 9 மணி தொடக்கம் காலை 12 மணி வரைக்கும் வைத்தியசாலையில் வேலை கிரமமாக நடைபெற்றுவருகிறது. ஏறக்குறைய நாளொன்றுக்கு அறுபது நோயாளருக்கு மருந்து கொடுக்கப்பட்டுவருகிறது. நோயிருந்தும் நோயைச் சொஸ்தப்படுத்துவதற்கு எற்ற வசதிக்குறைவுகளினுல் கஷ்டப்பட்ட வறிய சனங்களுக்கு மேற்படி வைத்தியசாலை பெரிதும் நன்மைபயந்து வருகின்றது. இதற்காக மயிலிட்டிக் கோயிற் பற்றிலுள்ள எல்லாக் கிராமவாசிகளும் அரசினருக்கும், இதை ஸ்தாபிப்பதில் வெகுவாகப் பிரயாசப்பட்டவர்களுக்கும் மிகவுங் கடப்பாடுடையவர்களாகின்றனர்.

---



### பிரமஸ்ரீ. பா. சண்முகக் குருக்கள் அவர்களின் சிவபதப்பிராப்தி.

யாழ்ப்பாணம் சங்கானையைச் சேர்ந்த, சித்தங்கேணி வாசரும், பிரபல சித்தாந்தவைத்தியரும், சிவபூசா துரந்தரரும், சென்னை ஏழாவதாம் ஆயுள்வேத சங்கத்தினரால் தக்க நற்சாட்சிப் பத்திரங்கள் பெற்றவரும், ஆகிய மேற்படி குருக்கள் அவர்கள் காத்திராதுண்டான சுரநோயினுற் பீடிக்கப்பட்டுத் தமது 68-ம் பிராயமாகும் நிகழும் பிரமாதிஹு ஆனிமீ கஎ-ந்திகதி சனிக்கிழமை இரவு இரண்டுமணியளவில், பூரணைத்திதியும், பூராடநட்சத்திரமும் கூடிய சுபவேளையிலே, இவ்வுலக வாழ்வைத்துறந்து சிவலோகவாழ்வை யடைந்தனர்.

இவர்: யாழ்ப்பாணம், இலங்கை, இந்தியா முதலாம் இடங்களிலுள்ள வைத்தியர்களாலும் மற்றும் பிரபுக்கள் உத்தியோகர் யாவராலும், வைத்திய சித்தியில் மிகவும் விசேஷமுடையவரென நன்கு மதிக்கப்பட்டு விளங்கியவர். தம்மிடம் வைத்தியத்திற்குச் செல்லும் நோயாளிகளை உடனே பார்த்து, அவரவர்க்குரிய காலபலன்களைக்கண்டு உண்மைகூறி வைத்தியஞ் செய்வதையே கடைப்பிடித்து அதன்படி நடந்தும் நடப்பித்தும் வந்தார்; இதனுல் இவரது வைத்தியத்தில் சுகமுற்றோர் பலராவர். நோய்மாருத நட்சத்திரங்களில் ஒருவர்க்கு நோய்தோன்றில் அந்த நோயாளிக்கு உண்மையைக்கூறி, நோயாளி விரும்பினுல் மருந்து கொடுத்து அனுப்பிவிடுவார். நடப்பது இவர் கூறியபடியாதலின், இவரில் பலரும் பெரும் நம்பிக்கையுடையவர்களாயிருந்து வந்தார்கள்.

இக்குருசுவாமிகள் தம் சீவியகாலத்தில், ஈசுரபத்தி, இரக்கம், ஈகை, இன்சொல், விருந்தோம்பல், முதலிய சகலகுண லட்சணங்களிலும் சிறந்தவரா யிருந்ததுமன்றித் தருமமே செயம், சத்தியமே நித்தியம் என்னும் வாக்கியப்படி, பெரும்பாலான ஏழைகட்கு மனங்கோணுது, தமது விலையுயர்ந்த மருந்துகளை இலவசமாகக் கொடுத்துவந்த புண்ணியமே பெருங் கண்ணியச் செயலாகும்.

இவர் இந்த லெளகிக விஷயங்களெல்லாவற்றையும் வெறுத்து தமதுரிமையாகிய ஆலயபூஜை முதலியவற்றையும் தமது தம்பியாரிடம் ஒப்புக்கொடுத்துத் தமதில்லத்திலோர் பாகத்தில் ஓர் ஆச்சிரமமமைத்துச் சிவத்தியானத்துடனிருந்தார். ஆயினும் வைத்திய விஷயத்தை மாத்திரம் விடாமல் மிக விசேஷமாக நடத்திவருவது பெருந் தருமமென்றெண்ணி ஊக்கமாகவே அரிய சிந்தூரங்களைச் செய்தும், பலவகை மருந்துகளை உண்டாக்கியும் நோயாளிகளைச் சுகப்படுத்திவந்தார். இதனுல் இவர் ஆன்மாக்களில் கொண்டுள்ள அன்பு இனிது விளங்குப்.

இப்பெரியாரை இழந்தமை இவரின் இனத்தவர்களுக்கும், ஊரவர்களுக்கும், மாத்திரமன்றி இவரிடம் வயித்தியசிகிச்சை பெற்ற பிறவூரவர்கட்கும் பெரும் துன்பத்தை விளைவிப்பதாகும்.

---

### திரு. க. மயில்வாகனம் அவர்கள்

உடுப்பிட்டிவாசரும் இருமரபுந்துய்ய மாப்பாண முதலியார் வழித்தோன்றல் ஸ்ரீமான். கந்தையா அவர்களின் மூன்றுவது புத்திரரும், பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரிப் பிரதம கணித ஆசிரியரும், மலாய்நாட்டில் உத்தியோகமாயிருக்கும் திரு. முருகேசு, பென்சனர் திரு. சங்கரப்பிள்ளை யாதியோரின் சகோதரருமாகிய திரு. மயில்வாகனம் B. Sc அவர்கள் காத்திராதுண்டான சுரநோயினுற் பீடிக்கப்பட்டு நிகழும் பிரமாதிஹு சித்திரைமீ 31-ந் திகதி சிவபதப் பிராப்தி யெய்தினரெனக் கேள்வியுற்றேம்.

இளமைப் பருவமுடையராய் சகலகுண இலட்சணங்களிலும் சிறந்தவராய இவரைப்பிரிந்து ஆற்றெணுத் துயருறும் மனைவி, மக்கள், சகோதரர் மற்றும்யாவருடனும் நம்மனுதாபமுமிருக்கிறது.

காக்கை காவா கரைந்துண்ணு மார்க்கமு, மன்னநீ ரார்க்கே யுள,

# தேசத் தொண்டு

## கும்மி

1 தேச நலத்தினைத் தேர்ந்திடுவோம்—வேறு
செல்வத்தை நாடா திருந்திடுவோம்
ஆசை யுடன்தொண்டிங் காற்றிடில்நாம்—ஈசன்
அன்பினைப் பெற்றென்றும் வாழ்ந்திடுவோம்.

2 சுயநலந் தன்னைத் தொடராதே—நாமும்
தூய மனத்துடன் தொண்டுதனைப்
பயமின்றிச் செய்திடில் பண்புடனே—யென்றும்
பாரினில் வாழ்தல் பகரிதே.

3 இந்திய மக்களை நாம்பார்த்து—நல்ல
எழிலுறு தொண்டுகளெப்பொழுதும்
சிந்தையி லன்புடன் செய்திடுவோம்—யாரும்
சீரிய ரென்றெமைச் செப்பிடவே.

4 நாகரீ கம்மென்ற நஞ்சினைநாம்—பற்றி
நாளும் வருந்தி உழலாமல்
தேகம் மனத்தினை நாம்திருத்தி—நல்ல
சேவைகள் செய்வோமே—சீலமுடன்.

5 காந்தியைப் போன்ற கனவான்கள்—இந்தக்
காலத்தி லில்லாத காரணத்தால்
சாந்தம தின்றியே யெம்மவர்கள்—கெட்ட
தன்மை விளங்கிட வாழுகின்றார்.

6 தேச நலத்தினும் சீர்மிகுந்த—எந்தத்
திவ்விய சேவையுந் தேரோமே
நேச மதில்வைத்து நிற்போர்கள்—மேலாம்
நீர்மையை யெய்துதல் நிச்சயமே.

7 சங்கங்கள் கூட்டி யவற்றாலே—தக்க
சற்கரு மங்களை யாற்றிடுவோம்
துங்கமுடன் நாமும் மேலோர்புகழ்—தொண்டு
தூய்மையுடன் செய்ய முன்வருவோம்.

8 கைத்தொழில் வர்த்தகம் தன்னோடு—மிக்க
கண்ணிய மாருநல் வேளாண்மை
இத்தரை தன்னிலே செய்திடில்நாம்—என்றும்
இன்புறல் நிச்சயம் ஈதறிவீர்.

9 வாலிப ரெல்லோரும் மாண்புடனே—சேர்ந்து
மங்கள மாகவே நற்றொழில்கள்
சீல முடன்செய்யி லெந்நாடு—நல்ல
சீருறல் காணலாம் எப்பொழுதும்.

10 தாய்நாடா மிந்தியா தன்னோடு—நாமும்
சார்ந்திட வேண்டு மெனவிரும்பின்
வாய்மையுடன் தேசத் தொண்டினையும்—எங்கள்
வாழ்க்கையிற் சேர்த்திடல் மாண்பாமே.

11 நேரு மகானெங்கள் நாட்டினிலே—மக்கள்
நிர்ப்பந்தப் பட்டு வருந்தாதே
நேரும் பலகஷ்டம் நீங்கிடவே—இங்கு
நிர்ணயஞ் செய்திட வந்தாரே.

12 வந்த அவருக்கு வண்மையுடன்—நாமும்
மாட்சி நிறைந்த வரவேற்பு
சிந்தை மகிழ்ந்துமே செய்திடுவோம்—அவர்
செய்யும் முயற்சி சிறந்திடவே.

தேசத்தோண்டன்

---

### கதிர்காம ஆடித்திருவிழா

#### புகைரதப்பகுதிமலிந்த பிரயாணச்சீட்டுக்கள்

கதிர்காமத்திற்குச் செல்லும் யாத்திரீகர்களின் பிரயாண வசதியை உத்தேசித்து இலங்கை அரசினர் புகைரதப்பகுதியார் வழக்கம் போல, போகுஞ்செலவோடு போய் மீளுதற்கான கிரயங் குறைந்த பிரயாணச்சீட்டுகளை மூன்று வகுப்பிற் செல்லும் பிரயாணிகளுக்கும் உதவுவாராயினர். இலங்கையிலுள்ள எல்லாப் புகைரதத் தானங்களிலிருந்தும் இந்த மலிந்த பிரயாணச்சீட்டுக்கள் யூலாய்மீ 15உ சனிக்கிழமைதொடக்கம் யூலாய்மீ 30உ ஞாயிற்றுக்கிழமை முடியும்வரை மாத்தறை அப்புத்தளை என்னும் புகைரதத் தானங்களிற்போய் இறங்கத்தக்கனவாய் உதவப்படும். இச்சீட்டுக்கள் ஆக்கஸ்ட்மீ 5உ முடியச் செல்லத்தக்கன. யூலாய்மீ 28-ம் 29-ம் 30-ம் தேதிகளில் மாத்தறைப் புகைரதத்தானத்திற்குமாத்திரம் எடுக்கப்படும் சீட்டுக்களைக் கொண்டு ஆகஸ்ட்மீ 10-ந் தேதி முடியப் பிரயாணஞ்செய்தல்ஆகும்.

---

# "அபிஷேகத்துக்குப் பால் கொடுக்காதே"

## ஹரிஜனங்களை அனுமதித்ததில் வருத்தம்

### அனுசாரப் பட்டர்களிடம் அதிருப்தி சனாதனிகளின் கண்டனம்.

13-ந் திகதி

மதுரை ஸ்ரீ மீனாட்சி அம்மனின் தினசரி அபிஷேகத்துக்காகப் பால்கொடுக்கக் கோயிலுக்குள் மேல் ஆதி வீதியில் கிழ்ப்பூங்குடி ஸ்ரீமான் வள்ளியப்பச்செட்டியார் 20 பசுக்களைப் பசுமடத்தில் வைத்துப் பராமரித்து வருகிறார். காலஸ்நதி திருவநேந்தல் முதலியவற்றிற்காக அவர் வழக்கமாகப் பால்கொடுத்து வந்ததை இன்றுமுதல் நிறுத்திவிடும்படி உத்தரவிட்டுவிட்டார். இதற்குக் காரணம் ஹரிஜனங்கள் ஆலயத்திற் பிரவேசித்ததும் பின்பு கோயிலில் சம்ரோக்ஷணம் செய்ய மறுத்ததும் ஆகும்.

#### சனாதனிகளின் குறை

கோயில் அதிகாரிகள் வெளியேயிருந்து பூசைக்காகக் கொண்டுவந்த 4 பட்டர்களும் ஸ்ரீமான் வைத்தியநாதையர் வீட்டில் ஹரிசனங்களுடன் சேர்ந்து சாப்பிடுவதாகக் கூறுகின்றனர்.

#### நஷ்ட ஈட்டுக்குத் தாவா

சென்ற 13-ந் திகதி மாலை ராவ் சாகேப் நடேசையர் பிற்பகலில் மதுரை நீதிபதி ஸ்ரீமான் ஸ்ரீனிவாஸாசாரியார் முன்பாக நஷ்ட ஈட்டுக்காகத் தாவா தாக்கல் செய்யப்படுமென்று கூறினார். அத்துடன் முதல் பிரதிவாதியும் ஆலயத்தின் நிர்வாக அதிகாரியுமான ஸ்ரீமான் ஆர். எஸ். நாயுடுவை ஹரிஜனங்களை ஆலயத்துக்குள் அழைத்துச் செல்வதையும் அவர்கள் கோயிலுக்குள் போவதையும் தடைப்படுத்த வேண்டுமென்றும் நிரந்தரமாகத் தடை யுத்தரவு பிறப்பிக்க ஓர் மனு தாக்கல் செய்யப்படுமென்றும் பூஜையை நிறுத்தி ஆடி உற்சவத்தை நிறுத்தவும் மனு தாக்கலாகுமென்றும் கூறினார். ரூபாய் 3000 செலவில் பிரதிவாதிகள் செலவில் ஆலயத்திற்குச் சம்ரோக்ஷணம் செய்யவேண்டுமென்று உத்தரவிடக் கேட்டுக்கொள்ளப்படுமென்றும் பிரதிவாதிகள் எல்லோருமாகச் சேர்ந்து ரூபாய் 3000 தைச் சம்பரோட்சணத்துக்காக சேமிப்புச் செய்ய உத்தரவிடக் கோரப்படுமென்றும் அவர் தெரிவித்தார்.

தரிசனம் செய்த 6 பேர்களும் 2 முதல் 6 பிரதிவாதிகளாவர். ஸ்ரீ வைத்தியநாதையர் 8-வது பிரதிவாதியாகவும் ஸ்ரீமான் கோபலஸ்வாமி 9-வது பிரதிவாதியாகவும் ஹரிஜனங்கள் தரிசனத்தின் போது பூசைசெய்த ஸ்ரீ பொன்னுஸ்வாமி பட்டர் 10-வது பிரதிவாதியாகவும் சேர்க்கப்பட்டிருக்கின்றனர்.

ஸ்ரீமான் நடேசையர் மேற்படி மனுக்களை நாளை உத்தரவு பிறப்பிப்பதற்காகக் கோட்டில் கொண்டுவர உத்தேசித்திருக்கிறார்.

தார்த்தெருக்களில் சனாதனிகளைக் கண்டித்தும் பட்டர்களின் செய்கைகளைக் கண்டித்தும் விகாரமாகச் சுண்ணாம்பால் எழுதப்பட்டிருக்கின்றன. சனாதனிகள் இந்த விஷமப் பிரசாரத்தைக் கண்டிக்கின்றனர்.

நேற்று ராவ் சாகேப் நடேசையர் தலைமையில் தெற்கு ஆவணி வீதியில் சனாதனிகள் கூட்டம் நடந்தது. ஏராளமான சனங்கள் வந்திருந்தனர். ஸ்ரீமான்கள். சக்தி வேலுப்பிள்ளையும் சுந்தரமூர்த்தி ஓதுவாரும ஹரிஜனங்களின் ஆலயப் பிரவேசத்தைக் கண்டித்துச் சம்பரோக்ஷணம் செய்யவேண்டுமென்று வற்புறுத்திப் பேசினர்.

திருமுகூரில் ஹரிஜனங்கள் ஆலயத்துக்குள் சென்று தரிசித்ததாக வந்த செய்தி மறுக்கப்படுகிறது. அங்கு ஹரிஜனங்கள் போனதாகப் பத்திரிகைகளில் வந்த செய்தி (மித்திரனில் அல்ல) சரியற்றதென்று கூறப்படுகிறது.

இன்று கூட விளம்பர மந்திரி கனம் ராமநாதன், ஸ்ரீமான் வைத்தியநாதையர் வீட்டில் ஆலயப் பிரவேசச் சம்பந்தமாக அநேகருடன் விவாதித்து வருகிறார். கனம் மந்திரி நேற்றிரவு சனாதனத் தலைவர்களுடனும், பட்டர்களுடனும் விவாதித்தார். இன்றும் கனம் ராமநாதன் இங்கு தங்குவாரெனத் தெரிகிறது. இ-ம்.

---

### அட்டபத்தன மருந்து

சுத்தமாக எம்மாற் செய்யப்பட்ட மேற்படி மருந்து எம்மிடத்தில் விலைக்கிருக்கின்றன. தேவையானோர் எம்மிடத்தில் வந்தேனும், அல்லது தபால்மூலமாயேனும் பெற்றுக்கொள்ளலாம்.

இங்ஙனம்
கு. கா. மதுரேஸ்வரக் குருக்கள்
சிவலிங்கப்புளியடி
வண்ணார்பண்ணை

---

### வல்லிபுர மான்மியம்

இப்பெயருடைய புத்தகம் எம்மிடத்தில் விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம். பிரதி ஒன்றின் விலை சதம் 10.

இதனை இயற்றிவர் தூன்னாலை வடக்கு பிரமஸ்ரீ. ஆ. சபாரத்தினக்குருக்க ளவர்களாவர்.

### தமிழ் ஆசௌசதீபிகை

இதனை இயற்றியவரும் மேற்படி குருக்கள் அவர்களாம். இதன் விலை சதம் 40.

---

பொதுநோக்கான் வேந்தன் வரிசை போக்கி, அதுபோக்கி வாழ்வார் புலர்.

## மாவிட்டபுரம் கந்தசாமிகோவில்

இக்கோவிலில் ஆடி மீ ௫-ந்உ வெள்ளிக்கிழமை துவசாரோகணமும், ௨௮-ந்உ ஞாயிற்றுக்கிழமை இரதோற்சவமும், ௨௯-ந்உ திங்கட்கிழமை கிரியலைத் தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

## ஆசாரியாபிஷேகக் கொண்டாட்டம்

அச்சுவேலி சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக்குருக்கள் அவர்களின் சிரேஷ்டபுத்திரரான சிவஸ்ரீ. வைத்தியநாதசாஸ்திரிகள் இந்தியாவுக்குச்சென்று திரும்பிவந்த தினத்தன்று, அவ்வூரவர்களும் அன்பர்களும் சேர்ந்து குருவபிஷேக மகிழ்ச்சிக்குரிய கொண்டாட்டங்கள் நடத்தினர்.

## தெல்லிப்பழைக் கிராமச்சங்கத் தெரிவு

இதில் திரு. ச. சங்கரப்பிள்ளை அவர்கள் தலைவராகத் தெரிவுசெய்யப்பெற்றுரென அறிகின்றோம்.

---

# யாழ்ப்பாணம் :: :: :: :: சுப்பிறீங்கோடு

## இளவாலைக் கொலை எத்தன வழக்கு

### எதிரிகளுக்குக் கடூழிய மறியல் தண்டனை

இளவாலையில் சென்ற 1939ம் ஆண்டு பெப்ரவரிமாதம் 1ந்தேதி (1) அந்தோனிப்பிள்ளை - சுவாம்பிள்ளை, (2) சுவாம்பிள்ளை - அந்தோனிப்பிள்ளை, (3) சூசைப்பிள்ளை-ஞானப்பிரகாசம், (4) மனுவல்-அந்தோனிப்பிள்ளை, (5) மரியாம்பிள்ளை-வயித்தியாம்பிள்ளை, (6) மரியாம்பிள்ளை-சூசைப்பிள்ளை, (7) அந்தோனிப்பிள்ளை-மனுவல்பிள்ளை, (8) மனுவல்-வயித்தியாம்பிள்ளை, (9) சந்தியாப்பிள்ளை-சவுரிமுத்து, (10) சூசைப்பிள்ளை-சிமியோன் ஆகிய வேளாள வகுப்பைச் சேர்ந்த பத்து எதிரிகளும் சட்ட விரோதமாகக் கூட்டங்கூடி, அவ்வூர்ச் சூசைப்பிள்ளை பெண் மரியப்பிள்ளைக்கும் மகன் மனுவல்பிள்ளைக்கும் பொல்லுகளாலும், கற்களாலும், கத்தியாலும் காயம் வருவித்ததினிமித்தமாகக் கொலைசெய்ய எத்தனித்ததாகக் குற்றஞ்சாட்டிய வழக்கு யாழ்ப்பாணம் சுப்பிறீங்கோட்டில் விசாரணைக்கு நீதியரசர் திரு. நீல் முன்னிலையில் எடுக்கப்பட்டது. விசாரணையில், வேறு எதிரிகளையும் விசாரணை செய்த பின்னர், யூரிமார் ஏகமனதாக 7-ம் 9-ம் எதிரிகளைக் குற்றவாளிகளல்லவென்றும், மற்றைய எட்டு எதிரிகளையும் சட்ட விரோதமாகக் கூட்டங் கூடியதற்கும் எதிரிகளிற் சிலர் கொலை செய்ய எத்தனித்ததற்கும் குற்றவாளிகளாகக் காணப்படுவதாகக் கூறினர்கள்.

நீதியரசர் எதிரிகளை நோக்கிக் கூறியதாவது:—

நீங்கள் சட்ட விரோதமான கூட்டங் கூடி, மற்றவர்களுக்குத் தீமை விளைக்கும் நோக்கமாகச் சென்றீர்களென்று சாக்ஷிகள் மூலம் பெறப்படுகிறது. அல்லாமலும், ஒன்றுமறியாத ஒரு தயாரையும் மகனையும் கொல்லும் நோக்கத்தோடு காயங்களுண்டாக்கியதாயும் உங்களிற்சிலர் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிறீர்கள். உங்களுக்காக ஏற்பட்ட நியாயவாதி நீங்கள் முன்னர் ஒரு வகையான குற்றச்சாட்டுகளில் அகப்படாமையால் இதையே உங்களுக்கு முதற் குற்றச்சாட்டாகப் பாவித்துச் சலாக்கியம் காட்டும்படி என்னைக் கேட்டுக்கொண்டார். மேலும் 10-ம் எதிரியின் நன்னடத்தையைகுறித்து மூன்று நற்சாக்ஷிப் பத்திரங்களைத்தந்தார் அவற்றையும் பார்வையிட்டேன். உங்களைப் போன்ற சுபாபமுடையவர்களுக்கு ஒரு படிப்பனையாக இருக்கவேண்டுமென்ற நோக்கத்தோடு உங்களுக்குத் தண்டனையை விதிக்கிறேன். உங்களுக்குட் சாதிக்கட்டுப்பாட்டுக்கொள்கை எப்படியும் இருக்கலாம். ஆனல், இக்கொள்கையை மற்றவர்களைப் பயமுறுத்தியோ தாக்கியோ கைக்கூடும்படி செய்தல் கூடாது. இங்கிலாந்தைப்போல் இலங்கையிலும் சட்டம் எல்லாருக்கும் சமத்துவமுடையது. இன்று நீங்கள் சாதிக்கட்டுப்பாட்டால் இங்கே நிற்கவில்லை. பின்னைப் பொதுமக்கட்குரிய கட்டளைச்சட்ட ஒழுங்கைக் கவனிக்காததால் நிற்கிறீர்கள். உங்களிற்சிலரும் காயமடைந்திருக்கிறீர்கள். உங்கள் மீது காயம் வருவித்தவர்கள்மீது குற்றஞ்சாட்டப்படவில்லையென்று தெரிகிறது. உங்களில் ஒருவர்நீக்கி மற்றையோர் நன்னடத்தையுடையவர்களெனக் கூறப்பட்டது என்று சொல்லிக் கீழ்க்காணும்விதம் எதிரிகட்குத் தீர்ப்புக்கூறினர்.

| | | | |
|---|---|---|---|
| 1-ம் | எதிரிக்கு | 5½ | வருடம் |
| 2-ம் | ,, | 4½ | ,, |
| 3-ம் | ,, | 2½ | ,, |
| 4-ம் | ,, | 6 | மாதம் |
| 5-ம் | ,, | 2½ | வருடம் |
| 6-ம் | ,, | 18 | மாதம் |
| 8-ம் | ,, | 3 | ,, |
| 10-ம் | ,, | 3 | வருடம் |

ஆகக் கடூழியச் சிறைத்தண்டனை விதித்தார்.

---

## மணலிலிருந்து மின்சாரம்

ஒலி பரப்புதற்கு இன்றியமையாத "வால்வை"க் கண்டுபிடித்த 89 வயதுள்ள விஞ்ஞானி ஸர். அம்புரோஸ் பிளமிங் என்பவர், மின்சாரம் உற்பத்திசெய்யப் புது முறையொன்றைக் கண்டுபிடித்திருக்கிறார். மணலைத் துவாரமிட்ட, தூத்தநாகத் தகடு வழியே விழச் செய்தால் மின்சாரம் உண்டாவதாக அவர் செய்து காண்பித்தார்.

## கிளியிலிருந்து இளமை

இளமை அளிக்கும் மருந்து செய்வதற்காக இந்தியாவிலிருந்து சுமார் இரண்டாயிரம் கிளிகள் வரை ஜெர்மனிக்குச் செல்லப்போகின்றன. பஞ்சாபிலிருந்து தான் இதில் பெரும் பகுதி அனுப்பப்படுமென்று தெரிகிறது.

# சிங்கம் ஜவஹரின் வீர கர்ச்சனை

## மந்திரிமாரின் தயக்கமா?

18உ முழுவதும் பண்டிட் ஜவஹர்லால்நேருவுக்கு ஓய்வென்பதே கிடைக்கவில்லை. காலையில் அவர் மந்திரிசபையாரைக்கண்டுபேசினர். அதற்கு முன்னும் பின்னும் இந்தியர் சங்கங்களின் தலைவர்கள் திரும்பத்திரும்ப அவரோடு சம்பாஷித்ததாய்த் தெரிகிறது. இலங்கை இந்திய காங்கிரஸ்காரர் பண்டிட்ஜீயுடன் பேசிக்கொண்டிரு[illegible]கயில் இந்திய மத்திய சங்கத்தாரும் வந்தார்களாம். வந்ததும் காங்கிரஸ் பிரதிநிதிகள் எழுந்து நழுவப்பார்த்தார்களாம். உடனே நேருஜீ, "ஏன் போகவேண்டும்? எல்லோரும் சேர்ந்து எல்லோருக்கும் பொதுவான விஷயத்தை ஆராயலாமே? அந்நிய நாட்டிற்கு வந்தவிடத்திலும் நீங்கள் ஒற்றுமையாயிருக்கக்கூடாதா? தூக்குமரத்தில் சாகும்போதுமா தனித்தனியே பிரிந்து சாகவேண்டும்?" என்று சொன்னராம். பிறகு யாவரும் பொதுவிஷயம்பற்றிப் பேசினர்களாம். நேருஜீயின் வார்த்தைகள் இங்குள்ள இந்தியத் தலைவர்களுக்கு நல்ல புத்தியையும், ஒற்றுமையுணர்ச்சியையும் கொடுத்திருக்குமாவென்பது இனிமேல்தான் தெரியவேண்டும்.

* * *

இலங்கை இந்திய காங்கிரஸ் இந்தியர் மத்தியசங்கம் ஆகிய இருவரையும் ஒன்றுசேர்த்துவிடவேண்டுமென்ற எண்ணத்தோடேயே நேருஜீ, இருவரும் ஏககாலத்தில் தம்மிடம்வர முன்னேற்பாடுசெய்தாரோவென்று சிலர் நினைக்கிறார்கள் இதுவும் ஒருசமயம் உண்மையாயிருக்கலாம். சமரச தூதராக வந்த இராஜதந்திரி ஜவஹர், முதலில் இந்திய சமூகத்திலுள்ள பிளவுகளை அகற்றி சமாதானத்தை நிலைநாட்ட முயலுவதும் இயல்புதானே?

* * *

மந்திரிசபையார் நேருஜீயிடம் சொன்னவைகளுக்கு ஜவஹர் என்னபதிலையளித்தாரென்பது இரகசியமாயிருக்கிறது. ஆனாலும் இரண்டொரு தகவல்கள் ககனமார்க்கமாக நமது செவிக்குவந்துசேர்ந்திருக்கின்றன. சில இந்தியரை நாடுகடத்தும் விஷயத்தில் இந்தியா இவ்வளவு தூரம் தீவிரமாக ஈடுபடுமென்று மந்திரிகள் எதிர்பார்க்கவில்லையாம். அவசரப்பட்டு தகாததைச்செய்து அல்லலை இழுத்துக்கொண்டு வந்துவிட்டோமேயென்று மந்திரிமார்கள் யோசிக்கிறார்களாம். என்றாலும் இவ்வளவுதூரம்வரை உத்தியோக தோரணையில் நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டதின்பிறகு பின்வாங்குவது தம்முடைய கௌரவத்துக்குப் பொருந்தாதே என்று சஞ்சலப்படுகிறார்களாம். போலி கௌரவமும், இந்தியா என்னசெய்யுமோவென்றகவலையும் மந்திரிசபையைச் சங்கடப்படுத்துகிறதாம். பண்டிட் நேருவோ நாடு கடத்தும் திட்டம் முதலில் ஒழுங்குசெய்யப்பட்டாலொழிய, இதர விஷயங்களை ஆராயமுடியாதென்றிருக்கிறாராம்.

* * *

தேவையில்லாத இந்தியரை நீக்குவதுகூட அவ்வளவு பெரிதில்லையென்றும், அவசர அவசரமாக கண்ணியமற்ற முறையில் இந்தியரை கல்தா கொடுப்பது, இந்தியாவின் கௌரவத்திற்குக் குறைவாயிருக்கிறதென்றும், இந்த அவமானத்தைச் சகிக்கமுடியாதென்றும் ஜவஹர் கூறுகிறாராம். "இலங்கையிலுள்ள இந்தியர் யாவரும் தூள் தூளாக நொறுக்கப்பட்டாலும் சரி; அவர்கள் மானத்தை இழந்து வாழவேண்டாம்!" என்கிறாராம் வீரன் ஜவஹர்! போதாக்குறைக்கு நேற்று மாலையில் பந்தயத் திடலில் பேசும்போது, "ஒரு இந்தியனுடைய உரோமத்தைத்தானும் மரியாதைக்குறைவாக ஒருவன் தொடுவதற்கு நானும் இந்தியாவும் சகிக்கமாட்டோம்!" என்று ஜவஹர் கர்ச்சனை செய்துவிட்டார். இதைக்கேட்ட எனக்குக் குடல்நடுக்கம்கூட வந்துவிட்டது.

* * *

"என்னஐயா! ஜவஹர்லால்வந்து பேசியாச்சே! சண்டையெல்லாம் முடிஞ்சுபோச்சுதா? அந்த சிங்கக்குட்டி வந்தால் எதுதான் நடக்காது?" என்று ரிக்ஷா இழுக்கும் இந்தியன்கூடக் கேட்கிறன்.

* * *

ஜவஹர் மீண்டும் இந்திய தலைவர்களையும், மந்திரிசபையையும் கண்டு பேசலாமென்று சொல்லப்படுகிறது.

நாடுகடத்தும் திட்டத்தைப் பற்றி மட்டும் பேச ஜவஹர் வரவில்லை. இலங்கை—இந்தியர் சம்பந்தப்பட்ட எல்லா விஷயங்களுக்கும் முடிவுகாண அவர் வந்திருக்கிறார். நாடுகடத்தும் திட்டம் எல்லாவற்றுக்கும் குறுக்கே சனியனுயிருக்கிறது. இந்தச் சனியனைநீக்க மந்திரிகள் இணங்குவார்களா? எல்லாம் வரவரத் தெரியும். மந்திரிகளைத் தனித்தனியாகவும் ஜவஹர் சந்தித்துப்பேசப் போகிறாராம். வீ-ரீ.

## அச்சுவேலித் தபாற்கந்தோர்

இந்தத் தபாற்கந்தோரின் தலைவராயிருந்து சில வருடங்களாகக் கடமை பார்த்துவந்த திரு. கந்தசாமி அவர்கள் கொழும்புப் பகுதிக்கு மாறிச்செல்ல, அவரிடமாகத் திரு. கிருஷ்ணசாமி அவர்கள் நியமனம்பெற்றுக் கடமைபார்த்து வருகின்றனர். மேற்படியார்போல, இவரும் தமது கடமையைச் செவ்வனே நடாத்திவருவாரென எண்ணுகின்றோம்.

---

தமராகித் தற்றுறந்தார் சுற்ற மமராமைக், காரண மின்றி வரும்.

# சிங்களமக்களின் விபரீத விளக்கம்

## தமிழர்களைப் பகைக்கத்தொடங்கியிருக்கும் காரணம்

[தமிழ்ப்பிரதிநிதியாகிய திரு. ஜி ஜி. பொன்னம்பலம் அவர்கள் கொழும்புத் தினசரி 'டைம்ஸ்' பத்திரிகையில் (26-6-39) எழுதி வெளியிட்ட கடிதத்தின் மொழிபெயர்ப்பு]

"ஐயா!

எங்கள் தமிழ்ச்சாதியாருக்கும் எனக்கும் விரோதமாகச் சிங்கள மொழியில் அச்சிடப்பட்ட பல துண்டுப்பிரசுரங்களை எழுதியவருடையபேர் மாத்திரமில்லாமல் இந்நாடெங்கும் சிங்களர் பரப்பிவருகின்றனர் என்பதை நான் அறியலானேன். சிங்களப் பாஷையை வாசிக்க நான் அறியேனாயினும் அப்பாஷையை நன்கு அறிந்தவர்கள்—எனக்கு நம்பிக்கையானவர்கள் அந்தக் கண்டனபத்திரங்களைப் படித்து எனக்கு விளங்கப்படுத்தியுள்ளார்கள்; நான் சிங்களச்சாதியாருக்கு வசைசொன்னேனென்றும், அவர்களைத் தூற்றினேனென்றும் அப்பத்திரங்களில் என்மீது அபவாதஞ் சுமத்தி வரையப்பட்டுள்ளன. அந்தத் துண்டுப்பத்திரங்களில் எனக்கு விரோதமாகச் சுமத்தப்பட்டுள்ள அபவாதம் அத்தனையும் பொய்யென்பதை நான் திடமாகச் சாதிப்பேன். அப்படியான துண்டுப்பத்திரங்களின் நோக்கம் தமிழரையும் சிங்களரையும் பகையாக்கி விடுதலேயாகும்.

### ஆத்திரப்படுவது அதற்கல்ல

உற்றுயோசித்துப்பார்த்தால் சிங்களர் என்மீது ஆத்திரங்கொள்வது நான் அவர்களுக்கு வசைசொன்னேன் என்றதையிட்டல்லவென்பது நன்கு புலப்படும். என்மேல் அவர்கள் ஆத்திரங்கொள்வதற்குப் பின்வருவனவே உண்மையான பெருங் காரணங்களாகும்:—

1. தமிழ் மக்களுக்கும் சமமான அரசியல் உரிமைவேண்டும்.

2. அப்படியே சனத்தொகையிற்குறைந்த சாதியினர் எல்லார்க்கும் சமத்துவமான சுயாதீனம் ஆவசியகம்.

3. தமிழ்ச்சாதியாரின் நன்மையையிட்டு இலங்கையிலும் இங்கிலாந்திலும் நான்செய்த முயற்சிகள்.

4. மந்திரிமார் எல்லாருஞ் சிங்களராயிருத்தலாகிய அக்கிரமம்.

5. அந்த மந்திரிமார் தங்களுக்குமாத்திரம் பூரண அதிகாரத்தை ஆக்கிக்கொண்டு ஏனைய சாதியாரையும் அவர்களுக்குரிய பிரதிநிதிகளையும் ஒதுக்கிவிடநினைத்தல்.

6. இதுகாறும் அரசினரின் கீழ் நாட்கூலிக்கு வேலைசெய்த தென்னிந்திய தொழிலாளிகளை நாட்டைவிட்டுஒட்ட முயன்றமை முதலியன.

சிங்களவர்கள்கொண்ட தீய நோக்கங்களைக்கண்டித்து அரசாங்கசபைக்கூட்டங்களிலும், ஊர்தோறும் நான்செய்யும் பிரசாரணங்களிலும் பேசிவருதலே என்மீது அச்சிங்களர் ஆத்திரங்கொள்வதற்குக் காரணமாகும். இப்படியான செயல்களையும் நோக்கங்களையும் நான் கண்டித்தமையை அகத்தே வைத்துக்கொண்டு, அந்தவிஷயங்களில் என்மீது குற்றஞ்சொல்ல இடமில்லாமையால், இப்பொழுது வேறொரு குற்றத்தை என்மேற்சுமத்தி என்னையும் எங்கள் தமிழ்ச்சாதியாரையும் தூற்றிப்புறக்கணிக்க முயலுகின்றனர்.

### நாவலப்பிட்டியில் சொன்னதென்ன?

நாவலப்பிட்டியில் நடந்த கூட்டத்தில் சிங்களர் விஷயமாகப் பழைய சரித்திர ஆராய்ச்சியைக்கொண்டு அவர்கள் கலப்புச்சாதியென்ற ஒருவாக்கியத்தைச் சொன்னது மெய்; ஆனால் அப்படிச் சொன்னதில் அவர்களுடைய பூர்விகநிலையைச் சொன்னதேயொழிய அவர்களுக்கு வசைகூறும் நோக்கமாகச் சொன்னேனல்ல என்பதையும், சிங்களருடைய மனம் அந்தஇடத்தில் நான்சொன்ன வார்த்தையினலே புண்பட்டிருந்தால் அதனை அவர்கள் பொறுத்துக்கொள்ள வேண்டுமென்றும் சில தினங்களுக்குமுன் தங்கள் அரிய பத்திரிகையிற் கடிதமூலமாக வெளியிட்டேனல்லவா? அப்படிச்செய்தது மாத்திரமன்றி, சிங்கள நண்பராயுள்ளார் பலருக்கு நான் அங்கே சொன்ன நோக்கத்தை நேரில் கண்டு கண்டு சொல்லியும் இருக்கிறேன். நான் அப்படிச் சமாதானம் சொல்லிவிட்டபடியால் இனிமேல் அவ்விதமான விவாதம், மனஸ்தாபம் எவையும் நேரமாட்டாவென எண்ணியிருந்தேன். ஆனாற் குரோதம்பூணுங் குணமுள்ள சில சிங்களர் நான்சொன்ன சமாதானத்திலே சாந்தியடையாமல் பின்னருங் கிளர்ச்சிசெய்யத் தலைப்பட்டிருப்பதால், நான் அந்த விஷயமாக இன்னமும் சிலவற்றைத் தங்கள் பத்திரிகையில் எடுத்துக்காட்டுகின்றேன்.

நான் இந்த அரசியல் விவகாரங்களிலே தலையிட்டு இற்றைவரையில் பத்துவருடங்களாகின்றன; இவ்வளவு காலத்திலும் ஒருமுறையாயினும் சிங்களச் சாதியினரைக் குற்றஞ்சொல்லி அறியேன்; என்னுடைய சாதியார்க்குச் சம சுவாதீனங்களைப்பெற்று உதவவேண்டுமென்பதே எனது பிரதான நோக்கம்; தமிழ்மக்கள் அரசியற் சுவாதீனங்களைப் பெறுவதற்குப் பூரண உரிமை உடையரென்பதைப் பழைய தேச சரித்திரத்தை ஆதாரமாகக் கொண்டு வாதித்திருப்பேன்; இனி இலங்கை மக்கள் முழுப்பேருடையவும் நலத்தையிட்டும் நான் இயன்றவரை உழைத்துவருகிறேன்; தமிழ்ச்சாதியார் விஷயத்தில் மாறுபட்டுநின்ற சிங்களத் தலைவர் சிலரின் செயலை நான் கண்டித்துப் பேசியதுண்டு; ஆனாற் சிங்கள சாதியாரை நான் எப்போதாயினும் ஒருங்கு கண்டித்ததுமில்லை; கண்டிக்க நோக்கங்கொண்டதுமில்லை. நாவலப்பிட்டியில் நான்செய்த பிரசாரணத்திலே சிங்களர் தமிழர்களுடைய உற்பத்தி இன்னபிறவற்றையிட்டு நான் ஏதும்பேசச் சந்தர்ப்பம் ஏற்படவில்லை; இந்நாட்டின் சரித்திரத்தைக்கொண்டும் வேறு ஆதாரங்களைக்கொண்டும் தமிழ்ச்சாதியார்தான் ஆதியில் (அதாவது சிங்களவரைக்காட்டிலும்முந்தி) இலங்கையிற் குடியேறினரென்பதைச் சாதித்தேன.

### சிங்களர்செய்த ஆட்சேபம்

அச்சமையத்தில் அக்கூட்டத்திலிருந்த சிங்களர் சிலர் எழுந்து சிங்களர்தான் முந்தி இலங்கையிலே குடியேறினர்களென்றும், விஜயனும் அவனுடைய பரிவாரத்தினரும் சிங்களமக்கள் என்றும் ஆசங்கைநிகழ்த்தினர்; அப்படி ஆசங்கை நிகழ்த்தியவர்க்கு, சிங்களச்சாதியென ஒருசாதி இந்தியாவில் விஜயன்காலத்திலாயினும், பின் எக்காலத்திலாயினும், இக்காலத்திலாயினும் இருந்ததாக--இருப்பதாகச் சொல்லப்படவில்லையெனவும், காலகதியில் இலங்கைக்குவந்த மகதநாட்டினரும் தமிழரும் இலங்கையிலிருந்த பூர்வீக சாதியினரும் கலப்புமணஞ் செய்தமையினுல் பெருகிய கலப்புச்சாதியென்றும் சரித்திரவாயிலாகத் தக்கஆதாரத்துடன் காட்டினேன்; நான்சொன்ன இந்த நியாயங்களையும் உண்மைகளையும் எனக்குமுந்தி இரு சிங்கள அறிஞர்களே தக்க ஆதாரத்தோடு கூறியிருக்கிறார்கள். அவர்கள் யாரெனில் இராசவாசல் முதலியார் டபிள்யு. எவ். குணவர்த்தன, டக்டர் ஜி. சி. மெண்டிஸ் என்னும் இருவருமாவர். நான் தமிழ்மக்களே இலங்கையிற் குடியேறிய ஆதிச்சாதியார் என்பதைத் தாபிப்பதற்காகவே இப்படிச் சொன்னேன் என்பதைத் திரு. பண்டாரநாயக ஒருவர் மாத்திரம் ஒப்புக்கொண்டிலர். தமிழ் அரசர்கள் முதல் அநுராசபுரத்தையும் பின் பொல்லநறுவையையும் இராசதானியாக்கிக்கொண்டு அரசாண்டனரென்பதையும், அவ்விரு பட்டினங்களிலுமுள்ள சிறந்த சிற்பவேலைகளெல்லாம் தமிழர் செய்தனவென்றும் அந்தநேரத்தில் நான் அங்கே சொன்னேன். அப்படியான சந்தர்ப்பத்திலேதான் மகாபராக்கிரமவாகு என்ற அரசனும் மூன்றில் இரண்டுபங்கு தமிழ்அம்சம் என்றேன். அப்படிச் சொன்னதற்கு, ஜோன் ஸ்ரில் என்பவரால் எழுதிச் சேர் அருணசலம் அவர்களின் அங்கீகாரத்தைப்பெற்றநூலை ஆதாரமாக எடுத்துக்காட்டினேன்.

### பராக்கிரமவாகு ஒரு பிராமணன்

இதில் யாராயினும் தம் சாதிக்கு வசைசொன்னதென்று எண்ணி என்னைக் குறைகூற இடமில்லையே; நாவலப்பிட்டிக் கூட்டத்தில் ஒருவர் இடையில் எழுந்து உம்மிடத்தில் மாத்திரம் இரத்தக்கலப்பில்லையோ என்று கேட்டபோது நான் சிரித்துக்கொண்டு அதைப்பற்றி எனக்குத்தெரியாதென்று பதில் சொன்னேன். இதில் என்ன பிழை? ஆங்கில அரச குடும்பத்தினர் ஜேர்மனியரின் கலப்புள்ளவர்களென்று

சந்தா விகிதம்.

முற்பணமே கட்டவேண்டும்.
மலாய்நாடுகளுக்கு வெள்ளி 5
இலங்கை, இந்தியாவுக்கு ரூபா 2½

விளம்பர விகிதம்

முற்பணமே கட்டவேண்டும்.
சிறு விளம்பரங்களுக்கு ரூபா 1¼
கலம் ஒன்றுக்கு ரூபா 3

அந்நாட்டுச் சரித்திர ஆசிரியர்கள் தக்க ஆதாரத்தோடு எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். அதையிட்டு ஆங்கில அரசவமிசத்தார் எவருங் குறைகூறவுமில்லை, கோபிக்கவுமில்லையே. பிற்காலத்தில் இலங்கை விஷயமாக நூல் எழுதிய பறூர் என்பவர் தமது நூலில் "பராக்கிரமவாகு ஒரு இந்துப்பிராமணன்" என்று எழுதியிருக்கிறாரே. அதற்கென்ன செய்வது? ஆனதால் நாவலப்பிட்டியிலசெய்த பிரசங்கம் சரித்திர சம்பந்தமானதன்றி வேறு ஏதும் நோக்கத்துடன் செய்யப்பட்டதல்லவென்பதை இப்பொழுது எடுத்துக்காட்டியிருக்கிறேன்.

### தமிழரைப் புறக்கணிக்கலாமா?

என் பேச்சின் நோக்கத்தை விபரீதப்படுத்தி அதற்காகத் தமிழரை வெறுத்துக் கண்டித்து நாட்டைவிட்டுத் துரத்தவும் சிங்களர் முற்பட்டு நிற்பதுதான் நூதனம். இந்தச் சிங்களர் முன்னரும் சில சந்தர்ப்பத்தில் தமிழ் மக்களுக்கு விரோதமாக இப்படியான செயல்களைச் செய்திருக்கிறார்கள். சென்ற 1923-ம் ஆண்டில் டிவொன்ஷயர்—மனிங் சாதனங்கள் தமிழ் மக்களின் சுவாதீனங்களையும் உரிமைகளையும் எடுத்துக்காட்டுவனவாய் வெளிவந்தபோது சில சிங்களப்பத்திரிகைகள் தமிழருக்கு விரோதமாக எழுதத் தலைப்பட்டன. தமிழருக்கு விரோதமாகச் சிங்களர் கூட்டங்கூட்டிப் பேசத்தொடங்கினர். பெயரிடாத கண்டனத் துண்டுப்பத்திரங்களை அச்சிட்டுப் பரப்பினர். சிங்களநாட்டிலிருக்கும் தமிழரைத் துரத்திவிடவேண்டுமென்றும் தொடங்கினர். இலங்கைச் சிங்கள மகாசன சபைத்தலைவர் என்றிருந்த ஒரு சிங்களப் பெரிய மனுஷனும் அப்படியான கருமங்களில் அக்காலத்திலே சம்பந்தப்பட்டிருந்தனர். சிங்களர் அந்த நேரத்தில் தமிழ் மக்களுக்குச் செய்யத் தலைப்பட்ட அடாதசெயல்களைக்கண்டு தமிழ்த் தலைவர்களாயிருந்த சேர். அம்பலவாணர் கனகசபை, சேர். அருணசலம், சேர். இராமநாதன் என்னும் இவர்கள் சிங்களர் எடுத்துக்கொண்ட அதிகார முறையையும் சேர்த்து எடுத்துக்காட்டிச் சமத்துவமான உரிமை தமிழருக்கு உதவப்படல் வேண்டுமென்று இலங்கை மகாமந்திரிக்குத் தந்திமூலமாகத் தெரிவித்தனர். இப்பொழுதும் சிங்களர் இந்தவிதமான பூரண அதிகாரத்தையும் சுதந்திரங்களையும் தமிழரைப் புறக்கணித்துத் தாங்கள் மாத்திரம் பெறவேண்டுமென்று நினைப்பரேல் அது ஒருபோதும் நடக்கப்போவதில்லை. இலங்கையில் ஒருசாதியார் மாத்திரம் முழு அதிகாரத்தையும் வகித்துக்கொண்டு தொகையிற் குறைந்த மற்றச் சாதியினரை அடக்கியாள முடியாது" ச—ன்.

கதைப்பகுதி

# சுந்தரன்செய்த தந்திரம்

(முன்தொடர்ச்சி)

### சுந்தரன் மாறுவேடமாய் மட்டக்களப்புக்குச் செல்லல்

சுந்தரன் ஆராய்ச்சியார் வந்ததும் தன்மேற் சிந்தைவைத்ததும் எந்தவிதமென்று சந்தேகங்கொண்டான். அவரது சேள்வியும் பார்வையும் தன்னை அகப்படுத்துங் கண்ணிகளென்றெண்ணிக் கொண்டான். ஐயையோ என் வாழ்நாளில் இவ்வளவு செல்வாக்கிருந்ததில்லை. வியாபாரமும் நாளடைவில் அதிக விர்த்தியாய்வருகிறது. இதனிடையில் "சடு உழவில் நந்தைதெறித்ததுபோல" எனக்கபாயம்நேரிட்டால் என் எடுப்பெல்லாம் பாழாகுமே! "சுரையான் புற்றெடுக்கப் பாம்பு குடிகொண்டதுபோல" நாம் பாடுபட்டுச் சம்பாதித்த பொருட்கள் பிறர் கைவசப்படுமே! இதற்கென்னசெய்வது? நான் இதுகாலும் சம்பாதித்த பொருட்களில் கொஞ்சமேனும் எனக்குதவாமல் எப்படி விட்டுவிட்டுப் போக மனம்வரும். ஆனல், "சுவரிருந்தாலல்லவோ சித்திரமெழுதலாம்" நான் காராக்கிரகம்போனல் எனக்குப் பொருளேன்? மதிப்பேன்? வருமுன் காப்பதே விவேகம். நான் எங்கேனும் ஒளித்தோடவேண்டும். அதற்குமுன் என்னுற் கூடியபொருட்களைக் கைப்பற்றவேண்டும். "பதறுதகாரியஞ்சிதறும்" என்றெண்ணி மனத்துணிவுடன் அடுத்த கடைகளுக்குப்போய் எனக்குக் கொழும்பில் அனேகபொருட்கள் வந்திருக்கின்றன. சில தீர்வைகட்டி எடுக்கவேண்டும். சில கொம்பனிக்கணக்கில் வந்திருப்பதால் பணங்கட்டி எடுக்கவேண்டும். உங்களுக்கு எச்சாமான் தேவையோ அதற்கு முற்பணந் தருவீரானல் நூற்றுக்கு ஐந்துவீத லாபத்துடன் அவைகளை உங்களுக்குத் தந்துவிடுகிறேனென்றான். அதைக்கேட்ட கடைக்காரர் சந்தோஷித்துப் பெரியமுதலாளியென்ற மதிப்பிருந்ததால் கூடியவரையில் பணஞ்சேகரித்துக் கொடுத்துவிட்டார்கள். அப்படியேசேர்ந்த ஒருலட்சத்துக்குமேலான இறைசால்களையும் தன் கடையிலிருந்த பணங்களையும் ஓர் வண்டியிலேற்றித் தொட்பிதோட்டத்துக்கு இராவிராவாய்க் கொண்டுபோய் அங்கே ஓர் விடுதிவீட்டில் அவைகளை வைத்துவிட்டு நான் இங்கிருந்து சில பணங்கள் சேகரித்துக்கொண்டு திரும்பக் கொழும்புக்குப் போகிறேன்; ஒருகிழமைக்குள் சாமான்களுடன் வருகிறேனென்று கடையில் தெரிவி என்று வண்டிக்காரனிடஞ் சொல்லியனுப்பினன். பின்னர் அப்பணங்களெல்லாவற்றையும் வட்டங்கொடுத்துத் தங்கநாணயங்களாக மாற்றிக்கொண்டு ஸ்லாமானவர்களுக்குரிய சாரம் தொப்பி பெல்ற் ஆதியவைகளையும் வாங்கிஉடுத்து வேஷம்மாறி ஓர் திறமான வண்டியையும் மாட்டையும் வாடகைக்கமர்த்தி மறுநாள் இராவிராவாய் மட்டுக்களப்பைநோக்கிப் பயணமானன். அவ்விதமே லுனுகலைசேர்ந்து வண்டிவாடகையைக்கொடுத்தனுப்பிவிட்டு அப்பால் கொண்டுபோகக்கூடிய பணத்தைவிட மிகுதியை ஓரிடத்தில் புதைத்துவிட்டுப் பாதசாரியாய் இராப்பகலாய்நடந்து மட்டுக்களப்புக்குப்போய் காத்தான்குடியிருப்பைச் சேர்ந்தான். அங்குள்ள ஸ்லாமானவர்கள் இவனைக்கண்டு சகோதரநேசம்பாராட்டி எவ்வூர், எங்கிருந்துவருகிறீர், பெயரென்ன என்றுகேட்டார்கள். அதற்கு அவன் எனது சங்கதியெல்லாம் பின்னர் சொல்லுகிறேன் இப்போது எனக்கு ஆயாசமிருக்கிறதென்றான். சுந்தரனுக்குப் போசனம் அளித்தபின் இனி உமது விர்த்தாந்தத்தைச் சொல்லுமென்று கேட்டுக்கொண்டார்கள். அவனே "அணணம் முட்டினல் எல்லாம்முட்டும்" என்றபடி சொல்லத்தொடங்கினன். நான் ஸ்லாம் ஆனவனல்ல. நான் திரிகோணமலையில் உயர்குடியிற் பிறந்தவர் என் தந்தை தாயர் யாழ்ப்பாணத்தவர். அங்குவந்து 25 வருடங்களின்முன் குடியேறினவர்கள். அவர்களதொழும் செய்வங்களும் அவர்கள் நடபடியும் எனக்குப் பிடிக்கவில்லை. என்மனம் அதனுல் என்றும் போராடிக்கொண்டிருந்தது. கொழும்பிலிருந்து வியாபார முகாந்திரமாய்வந்த காசிம் ராவுத்தர்என்ற ஒரு ஸ்லாமானவரிடம் உங்கள் மார்க்க கோட்பாடென்னவென்று கேட்டேன். அவர் அல்லா ஒருவரே கடவுளென்றும், அவர் போதனைப்படி நடப்பவரே முகம்மதியரென்றும் தம்மை அழைக்கிறார்களென்றுஞ் சொன்னர். அநேக கிறீஸ்தவர்களுமிருக்கிறார்கள். அவர்கள்போதனையும் நமக்கு அவ்வளவு திருத்தியாயிருக்கவில்லை. விக்கிரகவணக்கம் எனக்கு அருவருப்பு. ஆதலால் எனதுகருத்தை ராவுத்தருக்குச் சொன்னேன். அவர் தம்முடன் கொழும்புக்குவந்தால் எல்லாவசதியுஞ் செய்துதருவதாய் வாக்குச்செய்தார். நான் அதற்குடன்பட்டு கொழும்புக்குப் போனேன். அங்கு உடையையும் மாற்றித் தொப்பியுந்தரித்து மற்றச் சடங்குகள் செய்ய ஆயத்தமாயிருக்கும்போதே அதையறிந்த எனது அயலவர் திரிகோணமலையிலிருந்து நான் திருடிப் புறப்பட்டதாக ஒரு விறாந்துமுடித்துக் கொழும்புக்கு அனுப்பினர். அதைக்கொண்டு சேவகர் என்னை விசாரணைசெய்யத் தலைப்பட்டார்கள். அதையறிந்தவுடன் நான் இராவிராவாய் இங்கு வந்துவிட்டேன் என்றான்.

### சுந்தரன் ஸ்லாமியனுதல்

அதைக்கேட்ட ஸ்லாமானவர்கள் அப்படியா? இங்கே நாங்கள் மெத்தப் பவுத்திரமாய் உன்னைக்காப்போம். செய்யவேண்டிய உதவியெல்லாஞ் செய்வோம். இங்கு அவர்கள் வரமாட்டார்கள். உனக்குத் தாடியும் சரியாய் வளர்ந்துவிட்டால் உன்னை எப்படிப் பிடிப்பார்கள். அதற்கிடையில் சுன்னத்து முதலிய சடங்குகளை முடித்துக்கொள் என்றார்கள். அதன்பின் ஓர் லெவ்வையிடங் கொண்டுபோய் விடப்பட்டான். அவரோ அறிவிக்கவேண்டியவைகளை அறிவித்துச் செய்யவேண்டிய சடங்குகளைச் சில நாட்களுட் செய்துமுடித்தார். அவனுக்குச் சுல்தான் மகம்மது என்னும் பெயர் சூட்டப்பட்டது. இதனுல் இவன் சற்றே சரீரவருத்தமும் மனவருத்தமுமடைந்து இதற்குள் ஏன் வந்தேனென்று மனங்கலங்கினன். என்றாலும் இனிமேல் வரப்போகுஞ் சொகுசைநினைந்து மனத்தைரியமுற்றான். அங்குள்ளவரெல்லாரும் இவனிற் பிரீதியுற்று இவனுக்கு வேண்டிய உதவிசெய்ய முன்வந்தார்கள். சுந்தரனே கண்டியிலும் வியாபாரருசி கண்டவனுதலாலும் கொஞ்சம் பொருளிருந்ததினுலும் அங்கும் வியாபார முயற்சியிற் கையிட எண்ணினன். அதற்கான ஒத்தாசையெல்லாம் அங்குள்ளவர் செய்துகொடுத்ததினுல் சுல்தான் முகம்மது என்னும் விலாசத்துக்கு ஆங்காங்குள்ள பொருட்களை அழைப்பித்தும் அங்குள்ள பொருட்களை வாங்கியனுப்பியும் வியாபாரஞ் செய்தான். முன் புதைத்துவைத்த பணத்தையும் போய்த் தோண்டி எடுத்துவந்து தன்முதலுடன் சேர்த்துக்கொண்டான்.

### விவாகம்பேசுதலும் தன்பெண்சாதி இறந்ததேன்றறிதலும்

இதைக்கண்ட அங்குள்ள ஸ்லாமானவர்கள் இவனிற் பிரீதியுங் கண்ணியமும்வைத்துத் தக்க குடும்பத்திலுள்ள பெண்களை விவாகம் பேசினர்கள். தொகையான பணங்கொடுக்கவும் முன்வந்தார்கள். அதில் இருகட்சியாகி அங்கே விவாகஞ்செய், இங்கே விவாகஞ் செய்யென்று நின்றார்கள். அவனே ஒரு பகுதியையும் வெறுக்கக்கூடாது, வெறுத்தால் வில்லங்கம் வருமென்று ஒன்றுக்கும் உடன்படாமல் நாட்கடத்தி வந்தான். அதற்கிடையில் ஒருபகுதியார் இவனைமயக்கிப் பெண்ணையுங்காட்டி விவாகஞ்செய்ய நிச்சயித்துக்கொண்டார்கள். (தொடரும்)

~~~~~~~~~~

# பெரியபுராணப் பெரியோர்

## திருநாவுக்கரசு சுவாமிகள் சரித்திரம்

எழாலை திரு. செ. சின்னத்துரை ஆசிரியர் அவர்கள்

திருஞானசம்பந்தப்பிள்ளையார் உமையம்மையாரின் ஞானப்பாலை உண்டருளியபின் சீர்காளியுள்ளார் "மறைவளர்திருவே" என்றும் "பொறையணிமுகிலே" என்றும் "புண்ணியமுதலே" "புகலியர்புகலே" என்றும் இத்தன்மையான இதமொழிகளைக்கூறி ஆரவாரித்தார்கள். சிவபாதஇருதயர் தமது தவப்புதல்வனை தோளின்மேற்கொண்டு சென்றார். பலவிதமான அடியார்கூட்டங்கள் தம்மைச்சூழ்ந்துவர பிராமணர்கள் வேதபாராயணம் செய்ய, பாலருவாயர் தமது திருமாளிகைக்கு அளவிறந்த சிறப்புடன் சென்றார். அற்றைநாள்இரவு திருத்தோணியப்பரை மனதில் வணங்கிக்கொண்டு, விடியவும் திருத்தோணியப்பரை வணங்கச்சென்றார். அம்மையையும் அப்பனையும் வணங்கிக்கொண்டு திருக்கோலக்காவிற்குச்சென்றார். வேதங்களாலும் தேடிக்காணுதற்கரிய சிவபெருமானின் பாததாமரைகளை வணங்குவதற்காக "மடையில்வாளைகள் பாய......" என்ற முதலாகக்கொண்ட தேவாரத்தை அதிகசிறப்போடும் பாடும்பொழுது உலகமெல்லாம் உய்யவந்த பிள்ளையாரின் கையில் ஸ்ரீ பஞ்சாக்கரம் எழுதிய ஒரு தாளம் வந்திருந்தது. அச்சமயத்தில் பிள்ளையார் தமது தாளத்தை உச்சியின்மேல் வைத்து சிவபெருமானை வணங்கி ஏழுஇசையும் பொருந்தும்படியாக தேவாரத்தை எடுத்துப்பாடித் திருக்கடைக்காப்புச்சாத்தினின்றார். அப்பொழுது தேவர்கள் புஷ்பமாரி சொரிந்தார்கள். பிள்ளையார் சீர்காழிக்குச் சென்றார். திருத்தோணி அப்பனை வணங்கி "பூவார்கொன்றை" என்ற சொற்களை முதலாகவுடைய தேவாரத் திருப்பதிகத்தைப் பாடினர். திருநன்னிபள்ளிப்பிரமாணர்களெல்லாம் மங்கலம்பொலிய மறைகளோதி பிள்ளையாரிடம் வந்து அவரை வணங்கினர்கள். வந்த பிரமாணர்களுக்கு திருவமுதுமுதலிய உணவுப்பொருட்களைக்கொடுத்து சிவபாதஇருதயர் உபசரித்தார். திருநன்னி பள்ளிப்பிராமணர்தமதுஊருக்குப் பிள்ளையாரை வரும்படிகேட்க, அதற்குப் பாலறுவாயர் உடன்பட்டார். சிவபாதஇருதயர் பிள்ளையாரை எடுத்துத் தோளின்மேல் வைத்துக்கொண்டு திருநனிபள்ளியைநோக்கிச் சென்றார். ஆகாயம்வரைக்கும் அளாவியிருக்கிற சோலையைக்கண்டு அது எந்தப்பதியென்று பிள்ளையார் தகப்பனரைக்கேட்க, அது திருநனிபள்ளியென்றார். பின் பிள்ளையார் "காரைகள்கூகைமுல்லை......" என்ற சொற்களை முதலாகக்கொண்ட தேவாரத்தை எடுத்துப்பாடினர். திருநனிபள்ளிக்கோயிலை அடைந்து சிவபெருமானைக் கும்பிட்டு அவ்விடத்தில் சிலநாட்களாகத் தங்கியிருந்தார். தலைசைப்பிரமாணர்கள் திருஞானசம்பந்தப்பெருமான் திருநனிபள்ளிக்கு எழுந்தருளிச்சென்றதைக்கேட்டு காவணம், தோரணம், பூரணகும்பம், கமுகு, வாழை முதலியவற்றைநாட்டி பிள்ளையாரை அழைத்தச்சென்று தலைசைக்குச் சென்றார்கள். பிள்ளையார் சங்குவடிவமாய் அமைந்த அக்கோயிலை அடைந்து சிவபெருமானைக் கும்பிட்டுத் திருசாய்க்காட்டுக்குச் சென்றார். கோயிலுக்குச்சென்று "மண்புகார்......" என்றசொற்களை முதலாகக்கொண்ட தேவாரப்பதிகத்தைப் பாடினர். பின் அடியார்கூட்டங்கள் அளவுக்கடங்காத காதலுடன் பிள்ளையாரை திருவெண்காட்டுக்கு அழைத்துச்சென்றார்கள். மெய்ப்பொருளாயினரை "கண்காட்டும் நுதலாலும்......"என்றசொற்களை முதலாகவுடைய தேவாரத் திருப்பதிகத்தை எடுத்துப்பாடினர். பின் திருமுல்லைவாயிலை வணங்கிச் சீர்காழிக்குவந்து தேவாரங்கள் பாடினர். யாழ்வாசித்தலிற் திறமைமிக்க திருநீலகண்ட பாழ்ப்பாணர் சீர்காழிக்குச் சென்றார். யாழ்ப்பாணர் வருவதைக்கேட்டுப் பிள்ளையார் அளவிறந்த மகிழ்ச்சியுடையவராய்க் கோயிலுக்குக் கூட்டிச்சென்றார். பிள்ளையார் தேவாரங்களைப்பாட அவற்றையெல்லாம் யாழ்பாணர் யாழிலிட்டு வாசித்தார். அப்பொழுது தேவர்கள் சந்தருவர். பிராமணர்கள் முதலியோர்கள் யாழின் ஓசையைக்கேட்டு மகிழ்ச்சி யுற்றார்கள். யாழ்பாணர் அங்கிருப்பதற்குப் பிள்ளையார் ஓரிடம் வகுத்துக்கொடுக்கப் பாணர் அங்கு தங்கினர். பிள்ளையார் தேவாரங்களைப்பாட அவற்றை யாழ்பாணர் யாழிலிட்டு அதிக இனிமையாகப் பாடினர். இருபெருமக்களும் ஒருவரையொருவர் பிரியமாட்டாதவர்களாகி அங்கு தங்கினர்கள். பிள்ளையார் சிதம்பரத்திலெழுந்தருளியிருக்கின்ற நடராசப்பெருமானைக் கும்பிடவேண்டுமென்று அங்குபோகப் புறப்படத் தந்தையாராகும் சிவபாதயிருதயரும் அங்கு தாமும் வருவதாகக் கூறினர். தந்தையார் பிள்ளையார் யாழ்பாணர் அனேக அடியார்கள் ஆகிய இவர்களெல்லாம் புகலியை வணங்கிச் சிதம்பரத்திற்குப் புறப்பட்டார்கள். போகும் வழியிலுள்ள குயில், பட்சிகள் பிள்ளையாரின் வரவைக்கண்டு ஆனந்திக்கிறதைப்போலச் சத்தம் போட்டன. பூலோக சிவலோகமென விளங்கும் சிதம்பரத்திற்கு வந்து தெற்குவாயிலை அடைந்து வேதங்களின் ஒலியும் அடியார்களின் தோத்திர ஒலியும் பொலிகிற வீதியை அடைந்து கனகசபைக்கு முன்பாக வந்து கண்களிலிருந்து ஆனந்த அருவிசொரிய, உடம்பு புளகிதம் கொள்ள நடராசப் பெருமானை வணங்கிக் "கற்றாங் கெரியோம்பி ......" என்ற சொற்களை முதலாகவுடைய தேவாரத்தைப் பாடினர்.

(தொடரும்)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், வயாவிளான் திரு. சி. நல்லதம்பி என்பவரால் மேற்படியூர் "கோதைப்பிள்ளைசீமா"விலுள்ள ஆனந்தகுமான் அச்சுநிலையத்தில் 1939-ம் வருஷம் ஆடி மீ 20-ந் திகதி வியாழக்கிழமை அச்சிடுவிக்கப்பெற்று வெளியிடப்பெற்றது.
~~~~~~~~~~